


JPL
C3015

5

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY
JAFFNA
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
KOHA JPL
04-3-1994

# எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்

102589

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

322.42

நூல் ☐ எமது போராட்டமும் தற்சார்புப்பொருண்மியமும்

வெளியீடு ☐ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

முதற்பதிப்பு ☐ 16-01-1994

அச்சு ☐ ம. மரியதாஸ்

அட்டை ஓவியம் ☐ "தயா"


அட்டை அச்சு ☐ "ஞானம்" சங்கானை

விலை ☐ 30/-

இந்த நூல்

16-01-93 அன்று
வீரச்சாவடைந்த
மூத்த தளபதி

# கேணல் கிட்டு அவர்களுக்கும்



அவருடன் வீரச்சாவடைந்த
லெப். கேணல் குட்டிசிறி
மேஜர் வேலன்
கடற்புலி கப்டன் ஜீவா
கடற்புலி கப்டன் குணசீலன்
கடற்புலி கப்டன் றொசான்
கடற்புலி கப்டன் நாயகன்
கடற்புலி லெப். தூயவன்
கடற்புலி லெப். நல்லவன்
கடற்புலி லெப். அமுதன்

ஆகிய மாவீரர்களுக்கும்

KOHA JPL
PUBLIC LIBRARY JAFFNA



"எமது மண்ணில் எமது கால்களில்
தங்கிநிற்கும் தன்னிறைவான
வாழ்வை நாம் கட்டியெழுப்பவேண்டும்"

தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்

## எமது
## எண்ணம்

எம் மக்களின் பாரம்பரியப் பிரதேசத்தை மீட்டெடுத்து சுதந்திரமான சுகவாழ்வு வாழ்வதற்கான போராட்டம் நடைபெறும் இக்காலகட்டத்தில், மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளும் மற்றும் நெடு வாழ்வுக்கான தேவைகளும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றே.

எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எம்மிடமுள்ள அனைத்து வளங்களும் திறமையாகவும் உச்சமாகவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். திறமையாகவும் உச்சமாகவும் பயன்படுத்தப்படுவதற்கான பொருண்மியச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் இங்குள்ள மக்கள் நலன் நோக்கிய அனைத்து நிறுவனங்களினதும்

102589

தார்மீகக்கடமையாகும்.

எல்லா வகையாலும் எம்மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் தந்திரோபாயத்தை கையாளும் சிறிலங்கா அரசு எமது பொருண்மியத்தை சிதைக்கும் அடிப்படை நோக்கத்துடன் செயற்படுகிறது. இவ்வேளையில் நாமும் எமது மக்களை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கான பொருண்மிய மேம்பாட்டுத் தந்திரோபாயங்களை சாதுரியமாக கையாளுதல் வேண்டும். அவ்வாறான பொருண்மிய மேம்பாட்டுத் தந்திரோபாயமாக தற்சார்புப் பொருண்மியக் கட்டமைப்பொன்றை உருவாக்க முழு அளவில் பாடுபடுதலே பொருத்தமானது.

மேலைத்தேய பொருளியலாளர்கள்



இம்முறை முழு அளவில் வெற்றியளிக்கமாட்டாது என்றும் சர்வதேச வர்த்தக உறவுகளாலேயே பொருண்மியத்தை முழு அளவில் வளர்த்தெடுக்க முடியும் என்றும் குறிப்பிடுவதை சுதந்திர தனியரசை உடைய அரசாங்கம் செவிமடுத்துக் கேட்டுச் செயற்படலாம். ஆனால் நாம் சுதந்திரத்திற்காகப் போராடும் போது எமது பாரம்பரியப் பிரதேசத்திற்கு இன்றைய நிலையில் பொருத்தமான பொருண்மியத் திட்டமாக தற்சார்புப் பொருண்மியக் கட்டமைப்பை உருவாக்க முனைவதைவிட வேறு பொருண்மிய வழிமுறைகள் ஏதுமில்லை. தற்சார்புப் பொருண்மிய முறையை வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் குறிப்பாக 70 களில் தமது பொருண்மியக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தி செயற்பட்டன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தால் நன்மையடையும் என எதிர்பார்க்கப்பட்டதற்குப் பதிலாக வர்த்தகத்தால் தம் வருமானத்தை படிப்படியாக இழந்து வந்துள்ளதை லத்தீன் அமெரிக்க சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஆய்விலிருந்து அறியக் கூடியதாக இருந்தது.

ஒவ்வொரு நாடும் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடியதை உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யலாம். அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஏனைய பொருட்களை சர்வதேச நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்ற பொருண்மியக் கோட்பாடுகள் உள்ளன. ஆனால் இது இன்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளுடனான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத்தினால் ஏற்பட்ட வருமான இழப்பினால் ஏற்றுக்கொள்ள முடியாததாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் தமது உணவுப் பாதுகாப்பிற்காகவும், கைத்தொழிற் பாதுகாப்பிற்காகவும்

தற்சார்புப்
பொருண்மியக் கட்டமைப்பையே
விரும்புகின்றன. ஆகவே
எமது மக்களிற்கான பொருண்மிய
அமைப்பாக இன்றைய காலகட்டத்திற்கு
இதுவே பொருத்தமானது.
பொதுவாக பொருண்மியங்களின்
அடிப்படைப் பிரச்சனையாக பின்வரும்
விடயங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

1. என்ன பொருள் எந்தளவு உற்பத்தி செய்யப்படுகின்றது.
2. உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எந்த வழிமுறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
3. மக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகள் எவ்வாறு பங்கிடு செய்யப்படுகின்றன.
4. உற்பத்தி செய்வதிலும் அதனைப் பங்கிடுவதிலும் (விநியோகிப்பதிலும்) மக்கள் எத்தகைய திறன் வாய்ந்த நடைமுறையைப் பேணலாம்.
5. பிரதேசத்தின் உற்பத்தி வளங்கள் எவ்வாறு திறமையாக முழு அளவில் பயன்படுத்தப்படுகிறன.
6. இப் பொருண்மியச் செயற்பாட்டில் பணவீக்கமில்லாமல் கொள்வனவுச் சக்தி எந்தளவிற்கு உறுதிப்படுத்தப்படுகிறது.
7. இவை எல்லாவற்றின் மத்தியிலும் உற்பத்தி இயலளவும், பொருண்மிய வளர்ச்சியும் தொடர்ந்து எவ்வாறு ஏற்படுத்தப்படுகின்றன.

இத்தகைய பிரச்சனைகளை
இத்தற்சார்புப் பொருண்மிய முறை
பெருமளவிற்கு தீர்த்து வைக்கின்றது.
இத் தற்சார்புப் பொருண்மியக்
கட்டமைப்பில்லாமல் வேறு எந்த
பொருண்மியக்கட்டமைப்பாலும்
இப் போராட்ட காலத்தில் மேற்
குறிப்பிட்ட அடிப்படைப் பொருண்மியப்
பிரச்சனையைத் தீர்த்து
வைக்க முடியாது.
சிறிலங்கா அரசு எமது மக்களிற்கான

உணவுப் பொருட்கள் வரும் வழியை அடைத்துள்ளது. அதே போல எமது மிகை உற்பத்திகளை விற்றுப் பணமாக்கும் வழிகளையும் மூடிவிட்டது. எமது உற்பத்திகளுக்கான உள்ளீடுகள் வரும் வழிகளும் திட்டமிட்டு மூடப்பட்டு விட்டன. உற்பத்திக்கு எரிபொருள் வழங்குவதில் பலவித நெருக்கடிகளும், தடைகளும்உள்ளன. உற்பத்திச் செயற்பாட்டிற்கு எரிபொருள் மிக அவசியமானது. எரிபொருட்தடையால் போக்குவரத்து வசதிகள் முற்றாக அற்றுப் போய் விடும் நிலையே தற்போது காணப்படுகிறது. இந் நிலையில் தற்சார்புப் பொருண்மிய வழிமுறை ஒன்றே திறன் வாய்ந்த பொருண்மியக்கட்டுமானமாக இருக்க முடியும். அதனால் தற்சார்புப் பொருண்மியக் கட்டுமானத்தை ஏற்படுத்த பல வழிகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பாடுபடுகிறது. இதற்காக பத்துத் துறைகளை இனம்கண்டு அத்துறைகளின் செயற்பாட்டை முடுக்கி விட்டு தற்சார்புப் பொருண்மியத்தை உருவாக்க, வரையறுக்கப்பட்ட பின்வரும் பத்து பகுதிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

1. விவசாயம்
2. கடற்தொழில்
3. விலங்கு வேளாண்மை
4. கிராமிய உற்பத்திக் குழு
5. பனை தென்னை வள அபிவிருத்தி
6. கைத்தொழில்
7. சக்தி
8. உணவு பதனிடுதல்
9. வர்த்தகம்
10. உட்கட்டுமானம்

எங்களிடம் மனித வளமில்லையா? நீர்வளம் இல்லையா? நிலவளமில்லையா? காட்டு வளமில்லையா? கடல்வளமில்லையா? கனிவளமில்லையா? எல்லாமே உண்டு. 10 வயதிற்கு மேற்பட்டவர்களும்

மனிதவளத்தை வழங்கக்கூடியவர்களுமான
பல லட்சம் மக்கள் இருக்கின்றனர்.
நெல், மற்றும் தற்காலிக,
நிரந்தரப்பயிர்செய்கைக்குகந்த700000க்கும்
மேற்பட்ட
கெக்டர் நிலப்பரப்பு உண்டு. தமிழீழத்தில்
நீர்பாசனம் செய்யப்படும் 31 பாரிய
நீர்ப்பாசனக் குளங்களும் 85 நடுத்தர
நீர்ப்பாசனக் குளங்களும் 533 சிறிய
நீர்ப்பாசனக் குளங்களும் உண்டு.
இவற்றினால் 363000 கெக்டர்
நிலப் பரப்பில் நீர்ப்பாசனமும்
மேற்கொள்ளப்படுகின்றது.
சிலாவத்துறையிலிருந்து திருக்கோவில்
வரை 600 மைல் நீளமான கடல் வளமும்
உண்டு. எமது பிரதேசத்தில்
கைத்தொழில் மையங்கள் இருந்த
பகுதிகள் சிறிலங்காவின்
இராணுவ மையங்களாக மாறியதால்

பாரிய கைத்தொழில் வளத்தை
தற்போது இழந்துள்ளோம். ஆனால்
அது படிப்படியாக எமது கைக்கு
வரும் பொழுது காங்கேசன் சீமெந்து
எமது மக்களின் கட்டுமானத்தேவைக்கும்
போதுமான அளவும் அதற்கு
மிஞ்சியதை வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யக்கூடியதாகவும்
இருக்கும்.
அதே போல ஆனையிறவு உப்பளம்,
பரந்தன் இரசாயனம், புல்மோட்டையில்
இல்மனைற், திருகோணமலையில்
செம்பு, மட்டக்களப்பில் கடதாசி,
பேசாலையில் தகரத்தில் மீனை
அடைத்தல் போன்றன எல்லாம்
எம் வசமானால் எங்கள் பிரதேசத்தின்
கைத்தொழில் பொருட்கள் எமது
மக்களின் வாழ்க்கைத்தரத்தை
உயர்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

முதன்மைச்செயலகம்
தாவடி, தமிழீழம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

102589

# "எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்"

நாட்டு மக்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை இயன்றவரை தாமாகவே உற்பத்தியாக்கி தமக்கான ஓர் பொருண்மியத்தை உருவாக்கிக் கொள்ளுதல் அவசியமானது.

ஒரு நாடு இன்னொரு நாட்டில் தங்கியிராமல் தனக்குரிய பொருண்மியக் கட்டமைப்பினை உருவாக்கி தனது தேவைகளுக்காக தனது சொந்த வளங்களிலும் முயற்சிகளிலும் தங்கி நிற்கும் முறைமை தற்சார்புப் பொருண்மிய முறைமை ஆகும். ஆனால் ஒரு மனிதனுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் அவன் வாழும் நாட்டிலேயே உற்பத்தி செய்வது சாத்தியமில்லை.

ஏனெனில் உணவுப் பொருட்கள் உட்பட குண்டூசி தொடக்கம் ஆகாய விமானங்கள் வரை உற்பத்தி செய்யக் கூடிய இயற்கை வளங்கள் அத்தனையும் ஒரே நாட்டில் காணப்படுவதில்லை. உதாரணமாக சீனாவில் ஆகாயவிமானம் உற்பத்தி செய்வதற்கு தேவையான இல்மனைட் அங்கு காணப்படாது. ஆனால் அது தமிழீழத்தில் அல்லது வேறொரு நாட்டில் இருக்கும். அவ்வாறே தமிழீழத்தில் கைத்தொழில் துறைக்கு தேவைப்படும் மூலப்பொருளான இரும்பு இல்லை. ஆனால் இரும்பு ஜேர்மனியிலும், ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும், இந்தியாவிலும் காணப்படுகிறது.

இதனாலேயே எமது நாளாந்த போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் மிதிவண்டிகளை, அவற்றிற்கான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யாமல் எம்மால் உற்பத்தி செய்ய முடியாது. ஆனால் நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவையும், எமக்குத் தேவை

யான ஆடைகளையும், வசிப்பதற்கு வசதியான வீடுகளையும் ஆக்கிக் கொள்வதற்கு நாம் இயன்றளவு எமது இயற்கை வளங்களைக் கொண்டு முயற்சி செய்ய முடியும்.



உள்ளூர் வளங்களில் இருந்து உச்சப்பயனை எமது சுய முயற்சிகளின் மூலம் பெற்று பொருண்மிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவது தற்சார்பு பொருண்மியமாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்து 44 வருடங்கள் ஆகி விட்டன. அன்றிலிருந்து எமது நிலப்பரப்பும் கடற்பரப்பும் படிப்படியாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. ஆட்சி அதிகாரம் சிங்களவர்களின் கைகளில் இருந்ததால் நாம் அவர்களில் தங்கி வாழ நேரிட்டது. அதன் காரணமாக எமது வளங்களை நாம் பயன்படுத்தி எமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல் எமது உரிமைகளும் பறிக்கப்பட்டன. பொருண்மியம், அரசியல், சமூகக் கட்டமைப்பு ஆகிய அனைத்திலும் அவர்களில் தங்கி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனாலேயே நாம் இன்று எமக்குரிய நாட்டை அடைந்திட முனைப்புடன் போராடி வருகின்றோம். தமிழீழப் போராட்டத்தின் காலத்தை இரு கட்டங்களாக நாம் பார்க்க வேண்டும்.

1. போராட்ட காலம்
2. தமிழீழ தேச நிர்மாண காலம்

இவ்விரண்டு காலத்தையும் கடந்து செல்கின்ற போதே எமது தமிழீழத்தேசம் பொலிவுடன் திகழ்வதைக் காண முடியும்.

போராட்ட காலகட்டத்தில் எமது தேவைகளைச் சுருக்கி அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கினால் எமது வளங்கள் எமது தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானது, எமது பொருண்மிய அமைப்பு எமது போராட்ட காலத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். அதாவது எமது அனைத்து வளங்களையும் பயன்படுத்தி கைத்தொழில் உட்பட அனைத்து பொருண்மியத் துறைகளிலும் எமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

எமது வளங்களைக் கொண்டு எமது கால்களில் தங்கி நிற்கும் பொருண்மிய அமைப்பை உருவாக்க வேண்டும். இந்த உணர்வை வளர்த்தல் அவசியமானதாகும். இல்லையேல் ஏனைய நாடுகளில் நிகழ்ந்தது போன்ற சோக அனுபவங்கள் சிங்களவர்களால் எமக்கும் உருவாக்கப்படலாம்.

நைஜீரியாவில் பயாவ்ரா என்றதோர் மாநிலம் தனியாக பிரிந்து செல்வதற்காக விடுதலைப் போராட்டம் ஒன்றினை நடாத்தியது. ஆனால் பொருண்மியத் தடை விதிக்கப்பட்டு அந்த நாடு முற்றுகை இடப்பட்டதால் அப்போராட்டம் நலிவடைந்து கைவிடப்பட்டது.

வியட்நாம் யுத்தத்தின் போதும் இதே நிலை இருந்தும் வியட்நாமிய மக்களின் மதிநுட்பத்தினாலும் வீரம் செறிந்த உறுதிமிக்க போராட்டத்தினாலும், அங்கு வெற்றி கிட்டியதிலிருந்து நாமும் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் இன்று இருவிதமான யுத்தங்களுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது.

1. இராணுவயுத்தம்
2. பொருண்மியத்தடை

102589



இவற்றில் ஒன்றிலாவது நாம் பலவீனப்பட்டால் எமது தமிழீழ விடுதலைக்கான போராட்டம் பின்னடைய நேரிடலாம். முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு பொறுப்புணர்வுள்ளவர்களாக நாம் செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

4

இராணுவ பலத்தில் அமெரிக்காவுக்கு போட்டியான வல்லரசாக இருந்த ரசியாவை திரும்பிப் பாருங்கள். அந்த நாடு பொருண்மியப் பின்னடைவினால் பலம் இழந்து இன்று துண்டு துண்டாகச் சிதறிவிட்டது. அமெரிக்காவுடனான பொருண்மிய யுத்தத்தில் தோல்வி அடைந்ததே இதற்குரிய காரணமாகும். ரசியா தொழில் நுட்பம், அணுவாயுதம், விண்வெளிப் பயணம் என்பவற்றில் முன்னேற்றம் அடைந்த நாடாக இருந்தது.

ரசியப்புரட்சி அங்குள்ள தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டதாகும். தொழிலாளர் புரட்சியினால் முதலாளித்துவ ஆட்சி முறையை மாற்றியமைக்க ரசியா கைத்தொழில் துறைக்கு ஊக்கமளித்தும் தற்சார்புப் பொருண்மிய அமைப்பு அங்கு உருவாகவில்லை. அங்கு கைத்தொழில் துறை வளர்ச்சி அடைந்தாலும் அதன் மூலம் கிடைத்த வருவாய் ரசிய மக்களின் நலன்களுக்காகச் செலவிடப்படவில்லை. மாறாக இராணுவ வல்லாதிக்கத்தை கட்டியெழுப்புவதற்காகவே செலவிடப்பட்டது. மேலும் கூடிய காலம் இங்கு குளிராக இருப்பதால் பயிர்ச்செய்கை பெருமளவு செய்ய முடியாது.

ரசியாவில் உணவுத்தட்டுப்பாடு நிலவியது. வளங்கள் சரியாக ஒதுக்கப்படாததால் உணவுப் பொருட்களுக்கு சரியான விலை கிடைக்கவில்லை. அங்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படாமல் இருக்க மானியங்களை வழங்கி செயற்கையாக விலைகளைக் குறைவாக வைத்திருந்தனர். உதாரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை குறைவாக வைத்திருப்பதற்காக அதன் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இரசா

யன உரவாக்கத்திற்கு மானியங்களை அரசு வழங்கி உணவுப் பொருட்களின் விலையை குறைவாக வைத்திருந்தது. மானியம் வழங்கப்படாவிட்டால் உணவுப் பொருட்களின் உற்பத்திச் செலவு மிக அதிகமாகவே இருக்கும். இவ்வாறான நடவடிக்கைகள் ரசியாவின் அரசியல் தோல்விக்கும் பொருண்மிய சீர்குலைவிற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தன எனலாம்



சீனாவில் நடைபெற்ற போராட்டம் விவசாயிகளினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டதாகும். அங்கு விவசாயத்தில் தன்னிறைவு காணக்கூடிய பொருண்மியக் கொள்கை அமுலாக்கப்பட்டு விவசாய பசுமைப் புரட்சி ஏற்பட்டது அங்கு கைத்தொழில் வளர்ச்சி ஓரளவுக்கு காணப்பட்டது. சீனாவின் சனத்தொகையானது இன்று நூறு கோடியைத் தாண்டியும் அது தனக்குத் தேவையான உணவினை தானே உற்பத்தி செய்கிறது. எனவே சீனா இன்றும் முதலாளித்துவ அலைகளின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்கின்றது.

சீனாவிலும் ரசியாவிலும் அவற்றின் பொருண்மிய கொள்கை முறைகளினால் ஏற்பட்ட விளைவுகளை நாம் பாடமாகக் கொள்ளலாம். இப் படிப்பினை எமக்குத் தேவையான தற்சார்புப் பொருண்மியத்தினை நாம் கட்டியெழுப்ப எமக்குத் தூண்டுதலாக அமைய வேண்டும். இல்லாவிட்டால் தமிழீழ தேசம் உருவாகிய பின்னரும் சிங்கள நாட்டின் அல்லது வெளிநாட்டின் காலடியின் கீழ் பொருண்மிய பற்றாக் குறைகளினால் நாம் பாதிப்படைய வேண்டி ஏற்படும்.

உலக நாடுகளை எடுத்து நோக்குகின்ற போது, எந்த ஒரு நாடாவது தனித்து தனது பொருண்மியத்தை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு நாடும் தனது மேலதிக உற்பத்தியை ஏற்றுமதி செய்து தனக்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்ய வேண்டும். இதனால் ஒவ்வொரு நாட்டிலும் ஏற்றுமதியும் இறக்குமதியும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்வதால் அந்நியச் செலாவணி கிடைக்கும். இறக்குமதியைக் குறைக்கும் போது ஒரு

நாட்டின் செல்வம் வெளியே செல்வது குறைக்கப்படும். இவ்வாறு மீதமாகும் பணத்தை நாட்டின் மேம்பாட்டுக்காகவும் நாட்டு மக்களின் நலன்களுக்காகவும் பாவிக்கக் கூடியதாக இருக்கும்.



இந்தியா உட்பட எந்தவொரு நாடும் எமது தற்சார்புப் பொருண்மிய நிலையை விரும்புவதில்லை. மாறாக இந்த நாடுகள் நாங்கள், தங்களில் தங்கியிருப்பதையே பெரிதும் விரும்புகின்றன. இதற்காகவே மேலைத்தேச நாடுகள் பல நிறுவனங்களை உருவாக்கி எங்களைப் போன்ற வறிய நாடுகளுக்கு கடன் வழங்கி வருகின்றன. இவ்வாறு கடன்களை வழங்குவதற்கு பல நாடுகளுக்கிடையே போட்டிகள் கூட ஏற்படுவதுண்டு. இவ்வாறு உதவிகளை வழங்குகின்ற போது உதவி செய்யும் நாடு தனது நலன் கருதி உதவி பெறும் நாட்டின் மீது நிபந்தனைகளை விதிக்கின்றது. இதனை நாம் உணர்ந்து, மதிநுட்பத்துடன் எமது நலன்களை விட்டுக் கொடுக்காமல் உதவிகளைப் பெற்று, எமது பொருண்மியத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

எம்மிடம் வளங்கள் உள்ளன. வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏராளமான நிதியும் மனித வளமும் வலுவும் தொழில் நுட்பமும் அவசியமானதாகும்.

1990ம் ஆண்டுக்குப் பின் சிறிலங்கா அரசினால் தமிழீழத்தில் பொருண்மியத்தடை கொண்டு வரப்பட்டது. பெரிய பெரிய நிறுவனங்கள் பல குண்டு வீச்சுக்களினால் அழிக்கப்பட்டன. எனினும் புதிதாக இங்கு சிறுஉற்பத்தி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை மக்களது தேவைகளை ஈடு செய்யத் தக்கதாக உற்பத்திகளை மேற்கொண்டன. எமது ஆற்றலைப் பயன்படுத்தி தேவைகளை ஈடு செய்யும் புதிய முயற்சியாக இவை அமைந்தன.

யுத்த ஆரம்ப காலத்தில் பொருண்மியத் தடையினால் நாம் பாதிப்படையப் போகின்றோம் என்றதோர் பீதி உணரப்பட்டது. ஆனால் பொருண்மியத் தடையினால் இங்கு ஓர் தனித்துவமான தற்சார்பு பொருண்மியக் கட்டமைப்பே உருவானது.

தமிழீழ மக்கள் மீது பொருண்மியத் தடை விதிக்கப்பட்டால் அவர்கள் போராட்டத்தில் வெறுப்படைந்து திசை திருப்புவார்கள் என சிறிலங்கா அரசு எண்ணியது. ஆனால் இங்குள்ள மக்கள் உணவு உற்பத்தியில் ஆர்வமும் உற்சாகமும் உள்ளவர்களாகவே உள்ளனர். பல அத்தியாவசியமான பொருட்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

எதிரியின் பொருண்மியத் தடையை சாதகமாகப் பயன்படுத்தி இங்கு ஓர் பொருண்மியக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு எம்மால் எடுக்கப்பட்ட முயற்சியினால் சிறிலங்கா அரசின் முயற்சி தோல்வி கண்டது. தென் பகுதியிலிருந்து தமிழீழப் பகுதிக்குள் கொண்டு வரப்படும் பொருட்களுக்குப் பதிலாக இங்கு பல பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

தரத்தில் தற்போது எமது உற்பத்திப் பொருட்கள் எமது தமிழீழப் பகுதிக்கு வெளியிலிருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு ஈடானதாக இல்லை. எனினும் காலப்போக்கில் அந்த நிலையை நாம் அடையலாம். ஏனெனில் அதற்கான முயற்சியும் திறமையும் எம்மிடம் உண்டு. இப்போது உள்ளூர் உற்பத்தியில் மக்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் ஓர் உற்சாகமான ஈடுபாடு ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கொக்கோ கோலா, கண்டோஸ், லக்ஸ், சன்லைட் போன்று எமது உற்பத்திகள் இல்லை என பலர் குறைகூறலாம். சவர்காரத்தை உற்பத்தி செய்வதற்கு இங்கு தேங்காய் எண்ணெய் உண்டு. அவ்வுற்பத்திக்கு பயன்படுத்தும் எரிசோடா முன்னர் பரந்தனில் உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது இங்கு உற்பத்தி செய்யப்படுவதில்லை. எரிசோடாவுக்கு பதிலாக வேறு பொருட்களைப் பயன்படுத்தும் போது சவர்க்காரம் நல்ல தர



மாக அமையாது தான். அத்துடன் உற்பத்திகளில் காணப்படும் குறைபாடுகளை ஆராய்ந்து தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்க ஆராய்ச்சி நிறுவனங்கள் இங்கு இன்னும் நிறுவப்படவில்லை.



தென்னிலங்கையில் கட்டுப்பெத்த, பேராதனை போன்ற வளர்ச்சி பெற்ற பல்கலைக்கழகங்கள் உள்ளன. இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் *(C. I. S. I. R)* கைத்தொழில் அபிவிருத்திச் சபை *(I. D. B)* போன்ற பல ஆய்வு அமைப்புக்கள் உள்ளன. உற்பத்திப் பொருட்களை வெளி நாடுகளுக்கு அனுப்பியோ அல்லது நிபுணர்களை வெளிநாடுகளில் இருந்து அழைத்தோ ஆய்வு செய்து தொழில்நுட்ப பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் காண்கின்றனர். ஆனால் இவ் வசதிகள் தற்போது எம்மிடம் இல்லை.

கைத்தொழில் ரீதியாக நாம் வளர்ச்சியடைவதற்கு தொழில் நுட்பங்களை ஆராயக் கூடிய அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய முயற்சிகள் தற்போது நடைபெற்றுவரினும் தமிழீழம் அமைந்த பின்னரே இது முழுமையடையும்.

எமது உற்பத்தியாளர்களுக்கு நல்ல ஆய்வுகூட வசதிகளும் நிபுணர்களின் சேவைகளும் கிடைக்க வேண்டும். இதுவே இன்றுள்ள பெரும் பிரச்சனையாகும்.

ஒரு நாட்டின் வறுமை நிலைக்கு அங்கு வாழும் மக்களின் சோம்பேறித்தனமே காரணம் என எம்மைச் சுரண்டிய மேலை நாடுகளால் முன்னர் கருத்துப் பரப்பப்பட்டது. ஆனால் இலத்தீன் அமெரிக்கப் பொருண்மிய நிபுணர் ஒருவர் முன்வைத்த கருத்து வேறுபட்டதாகும். மேம்பாடு குன்றிய நாடுகளின் வளங்களை மேம்பாடு அடைந்த நாடுகள் சுரண்டியதனாலேயே தான் அந்நாடுகள் வறுமை நிலையை அடைந்தன என்பதையும் மேம்பாடு அடைந்த மேலைத் தேச நாடுகள் மேலும் வளர்ச்சியடைந்தன என்பதும் அவரது கருத்துக்கள் ஆகும்.

PUBLIC LIBRARY
JAFFNA.



எல்லா நாடுகளும் சமச்சீராக வளங்களைப் பயன்படுத்தும் தன்மை இருந்திருந்தால் அவற்றின் பொருண்மிய வளர்ச்சியும் சமச்சீராக அமைந்திருக்கும்.

இந்தியா பருத்தி உற்பத்தியிலும், பருத்தி ஆடைகள் உற்பத்தியிலும் நீண்ட காலமாக மிகப்பெரிய வளர்ச்சி கண்டநாடு. ஆனால் பிரித்தானியா இந்தியாவைக் கைப்பற்றிய பின்னர் இந்தியாவின் ஆடை உற்பத்தித் தொழிலை முற்றாக சிதைத்தது. அதாவது வரி விதிப்பையும், பல்வேறு சட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வந்து ஆடை உற்பத்தித் தொழிலை பிரித்தானியா நசுக்கியது.

இதே சமயம் பருத்தியை குறைந்த விலையில் தனது நாட்டுக்கு எடுத்துச் சென்று ஆடைகளை உற்பத்தி செய்து, சந்தைப்படுத்துவதற்காக அவற்றை மீண்டும் இந்தியாவிற்கே கொண்டு வந்தது. பிரித்தானியா அத்துடன் கூடிய விலையில் சந்தைப்படுத்துவதற்கு நிர்ப்பந்தித்தது. இந்தியா வறுமை நிலை அடைவதற்கு இந்நடவடிக்கைகளும் காரணமாக அமைந்தன.

இத்தகைய நடவடிக்கையினை சிறீலங்கா அரசும் தமிழீழத்திற்கு செய்து வருகின்றது. ஒவ்வொரு நாடும் தன்னுடைய நலனுக்காக ஏனைய நாடுகளைப் பயன்படுத்துகின்றது. இத்தகைய நிலைக்கு நாம் ஆளாகாமல் எமது நாட்டின் பொருண்மியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். உள்ளூர் உற்பத்தியை மக்கள் பாவிக்க இடைவிடாது தூண்டுதல் வேண்டும்.

ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியும், தனிநபர் வருமானமும் பொருண்மிய மேம்பாட்டை எடுத்துக் காட்டும். தேசிய உற்பத்தி பெருகும்போது அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் வருமானங்களுக்கு ஏற்ப அவர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

01. எமது மண்ணில் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுவோர்.
02. அரச சம்பளம் பெறுவோர்.

PUBLIC LIBRARY
JAFFNA



03. வெளிநாட்டிலிருந்து உறவினர் அனுப்பும் பணத்தை நம்பி வாழ்வோர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வலுவடையும் போது அரச தொடர்புகள் அற்றுப் போகும். அப்போது அரச ஊழியர்களுக்கு பணம் சிறீலங்காவில் இருந்து வராமல் போகலாம். சிறீலங்கா அரச நிர்வாகம் தடைப்படும். வெளிநாடுகளில் உள்ள பலதரப்பட்ட பிரச்சனைகளால் அங்கு வாழும் தமிழ் மக்கள் இங்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். எனவே அரச சம்பளமும் வெளிநாட்டுப் பண வருவாயும் நிரந்தரமானதல்ல.

எனவே எமது நாட்டில் நாம் உற்பத்தியை மேற்கொள்வதன் மூலமே எமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியும். அப்போதுதான் எமது பணமும் வெளியே போகாமல் பாதுகாக்கப்படும்.

அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தொழில் நுட்ப ரீதியாக முன்னேற்றம் கண்டிருந்த வேளை இறக்குமதிக்கு அவை தமது நாட்டின் கதவுகளைத் திறந்து விட்டிருந்தன. சகல நாடுகளும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தாது சுதந்திர வர்த்தகத்தில் ஈடுபட வேண்டுமென வலியுறுத்தின. ஆனால் யப்பான் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் அடைந்தது, தரமான கார், தொலைக்காட்சிப்பெட்டி போன்ற ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்தது. இப் பொருட்களை அமெரிக்க மக்கள் கூடுதலாகப் பயன்படுத்தத் தொடங்கியதால் அமெரிக்காவின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புக் குறைந்தது. இதனால் அண்மையில் 25,000 தொழிலாளர்கள் வேலை செய்த அமெரிக்காவின் பிரபல கார் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றுகூட மூடப்பட்டது.

நிலைமையினை உணர்ந்து கொண்ட அமெரிக்கா இறக்குமதிப் பொருட்களுக்கு மறைமுகமாக வரி விதிப்பையும் புதிய சட்டங்களையும் அந்நியப்பொருள் இறக்குமதிக்கு எதிராக

கொண்டு வந்தது. பிறநாட்டுப் பொருட்களின் மீது ஏற்பட்ட நாட்டத்தின் காரணமாய் உள்நாட்டு உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு சீர் குலைந்தது. இதனை எமது மக்களும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். எமது மக்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை நுகர்வார்களேயானால் எமது உற்பத்தி பெருகும்.

பிரித்தானிய இளவரசி டயானா ஜேர்மன் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஸ்போட்ஸ் மொடல் பென்ஸ் கார் ஒன்றை கொள்வனவு செய்தார். அதனை பிரித்தானிய மக்களும் அந்நாட்டு பத்திரிகைகளும் வெகுவாகக் கண்டனம் செய்து விமர்சித்தன. இது அந்த நாட்டு மக்களின் தேசப்பற்று. தமது நாட்டுப் பொருட்களைப் பாவிக்க வேண்டுமென்ற அம்மக்களின் தேசிய உணர்வையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்தியாவில் அன்னியப் பொருட்களை பகிஷ்கரிக்குமாறு கோரிய காந்தி, கதராடை செய்யும் ராட்டினத்தை கொண்டு வந்து கதர் துணியை நெய்து அதன் பாவனையை இந்திய மக்களிடம் தூண்டினார். காந்தியின் வேண்டுகோளை ஏற்று இந்தியர்கள் தமது சுதந்திரப் போராட்ட காலத்தில் அந்நிய துணிமணிகளை வீதியில் போட்டு தீயிட்டு எரித்தனர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் கதர் துணியும் கைராட்டினமும் சுதேசிய உணர்வை கொழுந்து விட்டெரியச் செய்து பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தின.

இன்றும் பின்தங்கிய தொழில்நுட்பமுடைய சுரடுமுரடான கதரை அணிவது இந்தியாவில் பெருமையாகக் கருதப்படுகின்றது. இந்தியாவில் தேசிய உணர்வினைத் தூண்டும் பொருட்டு ''இந்தியனாய் இரு'' — ''இந்தியப் பொருட்களை வாங்கு'' என விளம்பரம் செய்கின்றனர். இவ்வாறான தேசிய உணர்வினால்த்தான் இந்தியா கைத்தொழில் வளர்ச்சியில் உலகில் 11ஆவது இடத்தை வகிக்கிறது.

102589





இன்று பொருண்மிய வளர்ச்சியில் முன்னிற்கும் நாடுகள் சரியான திட்டங்களை முன் வைத்து முன்னேறியுள்ளன. தனது உற்பத்திகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புக்களைத் தேடிய நாடுகள்தான் இன்று பொருண்மியத்தில் முன்னிலையில் நிற்கின்றன. முதலாம், இரண்டாம் மகாயுத்தம் ஆரம்பித்ததற்கான காரணம், ஐரோப்பிய நாடுகள் தமது உற்பத்திகளுக்குச் சந்தை வாய்ப்பைத் தேடி இறங்கியதேயாகும்.

18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டது. கைத் தொழில் புரட்சி காரணமாக தொழில்கள் பெருகிப் பல தொழில்கள் இயந்திரமயமாகின. புதிய தொழில்நுட்பங்கள் கைத்தொழிலில் புகுத்தப்பட்டன. இவற்றினால் உற்பத்தி பெருகி ஆரம்பத்தில் அந்தந்த நாடுகளிலேயே இருந்தன. ஆயினும் மிதமிஞ்சிய உற்பத்திகள் செய்யப்பட்டதும் அவற்றிற்கான சந்தை வாய்ப்புக்களை பிறநாடுகளிலேயே தேட வேண்டி ஏற்பட்டது.

ஏற்கனவே பிரித்தானியா தனது கடல்கடந்த குடியேற்றங்களாக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பர்மா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைக் கொண்டிருந்ததால், சந்தை வாய்ப் பினைச் சுலபமாகப் பெற்றுக் கொண்டது.

தனது குடியேற்ற நாடுகளில் காணப்பட்ட வளங்களைச் சுரண்டி உற்பத்திப் பொரு ளாக்கி அவற்றை அதிக விலைக்கு தான் அடிமைப்படுத்திய குடியேற்ற நாடுகளுக்கே விற்றதனால் பிரித்தானிய பொருண்மியம் பலம்பெற்று விளங்கியது. இதனால் குடியேற்ற வாத நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட ஏகாதிபத்தியப் போட்டி 2 ஆம் உலக மகாயுத்தம் தோன்ற ஓர் காரணமாகும். அதாவது இங்கு தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்த அடிமை நாடுகளை நிர்ப்பந்தித்ததைக் கவனிக்கலாம்.

PUBLIC LIBRARY
JAFFNA.

30154C



தமிழீழத்தைப் பொறுத்தவரை, நெல்லுற்பத்தியில் தன்னிறைவே காணப்படுகின்றது. இங்கு பெறப்படும் நெல்லுற்பத்தி பின்வருவாறு.

| | | |
|---|---|---|
| காலபோகம் | — | 4,30,000 மெ. தொன் |
| சிறுபோகம் | — | 1,79,000 ,, |
| மொத்தம் (1990 ஆம் ஆண்டில்) | — | 6 09,000 ,, |

இந்த உற்பத்தியிலிருந்து 4,08,000 மெ. தொன் அரிசியைப் பெறலாம். 1981 ஆம் ஆண்டின் புள்ளி விபரத்தை அடிப்படையாகக் கொண்டு 1990 இல் தமிழீழத்தின் தமிழர் சனத்தொகையை 18,00,000 எனக் கொள்ளலாம்.

ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 100 கிலோகிராம் அரிசி நுகர்வுக்காகத் தேவை என்ற அடிப்படையில் தமிழீழத்திற்கு ஒரு வருடத்திற்கு 1,80,000 மெ. தொன் அரிசி தேவைப் படும். எமது உற்பத்தியில் மேலதிகமாகக் கிடைக்கும் அரிசியை ஏற்றுமதி செய்யலாம்.

ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு எமது உற்பத்தியாளர்கட்கு துன்பத்தையே விளைவித்து வருகின்றது. அதாவது இங்கு அறுவடை காலங்களில் அந்தக் காலங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை தென்னிலங்கையிலிருந்து இங்கு ஸ்ரீலங்கா அரசு அனுப்புகின்றது. இதனால் இங்கு இப்பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைகின்றன. வெங்காயம் என்றால் என்ன, மிளகாய் என்றால் என்ன, ஸ்ரீலங்கா அரசு எமது உற்பத்திகளுக்கு இப்பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஆனால் இதே சிங்கள அரசுதான் மகாவலிப் பிரதேசத்தில் அறுவடை நடைபெறும்போது, இறக்குமதியைத் தடைசெய்து சிங்கள விவசாயிகள் பயனடைவதற்கு உதவி செய்கின்றது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.





இன்று மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் நெல் தேங்கி உள்ளது. அவர்கள் உயர் விளைச்சல் தரும் பி. ஜி. 11 — 11 இன நெல்லை உற்பத்தி செய்கின்றனர். இந்நெல்லை யாழ். பகுதி மக்கள் விரும்புவதில்லை. இங்குள்ளவர்கள் விளைச்சல் குறைவான சிவப்பு நெல்லையே விரும்புகின்றனர். எனவே எல்லா அரிசியையும் நாம் உண்பதற்குப் பழகிக்கொள்ள வேண்டும். அத்துடன் எமது உற்பத்தியாளர்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற மனநிலையும் எமக்கு உருவாக வேண்டும்.

இங்கு நெல் உற்பத்தி தடைப்பட்டால் ஸ்ரீலங்கா அரசு அதனை ஆயுதமாக்கி எம்மைப் பட்டினி போட்டுச் சரணடைய வைக்க முயற்சிக்கும். நாம் இதனை உணர்ந்து எல்லோரும் ஒத்துழைத்து எமது உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க வேண்டும்.

பனஞ்சாறு உயிர்ச்சத்துக்களையும், கனிப்பொருட்களையும் கொண்டது. இதிலிருந்து பல்வேறு சுவையான உணவுப் பொருட்களைச் செய்யலாம். இதிலிருந்து சீனி உற்பத்தி செய்வதன் மூலம் எமது சீனித் தேவையில் நாம் தன்னிறைவு காணலாம். பனம் பழத்திலிருந்து சாற்றை எடுத்து ஜாம், மென்பானம் போன்ற பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்ற வகையில் செய்யலாம். சாதாரணமாக 70,00 000 பெண் பனைகளிலிருந்து பனம் பழச்சாறு பெற்றால் சுமார் 200 — 350கோடி ரூபாவை அன்னியச் செலாவணி வருவாயாகப் பெறலாம். எம்மிடம் உள்ள பனை, தென்னை வளங்களில் இருந்து தும்பு உற்பத்தியில் நாம் தன்னிறைவு காணலாம். தும்பிலிருந்து கயிறும், தும்புத்தடி ஆகியவற்றையும் உற்பத்தி செய்யலாம்.

தமிழீழத்தின் மொத்த உப்பு உற்பத்தி முன்னர் 70,000 மெற்றிக் தொன்னாக இருந்தது. ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 5 கிலோ கிராம் உப்பு தேவையென்ற அடிப்

படையில் 18,00,000 பேருக்கு ஒரு வருடத்திற்கு 9,000 மெற்றிக் தொன் உப்பு தேவைப்படும். ஆனால் எமது உற்பத்தி 70,000 மெற்றிக் தொன் ஆதலால் தேவைக்கு மேலாக மீதமாகும் உப்பை நாம் ஏற்றுமதி செய்யலாம்.

1983 ஆம் ஆண்டில் தமிழீழத்தில் மொத்தமாக 1,04,315 மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டது. இது ஸ்ரீலங்காவில் ஒரு வருடம் பிடிக்கப்பட்ட மீனின் 56.6% ஆகும். இதில் எமது தேவைக்குப் பயன்படுத்தப்பட்ட 20,000 மெ. தொன் போக மிகுதி கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. எனவே தமிழீழம் மீன் உற்பத்தியில் தன் தேவையை விட மேலதிகமாகவே உள்ளது. ஸ்ரீலங்காவில் பாவிக்கப் படுவது போன்ற நவீன படகுகள் பயன்படுத்தப்பட்டால் மீன் உற்பத்தி மேலும் அதிகரிக்கப் பட்டு எமது தேவைக்கு மேலதிகமாக இருப்பதை ஏற்றுமதி செய்து அன்னியச் செலா வணியை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

வன்னி, மன்னார் மாவட்டங்களிலுள்ள கால் நடைகளின் எண்ணிக்கையளவு யாழ் மாவட் டத்தில் இல்லை. இதனால் வன்னி மாவட்டத்தில் அதிகளவு பால் கிடைக்கும் போது யாழ் மாவட்டத்தில் குறைந்தளவு பாலே கிடைக்கின்றது. வன்னிப் பகுதியில் பெறப் படும் மேலதிகமான பாலை யாழ் மாவட்டத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய சிறிலங்கா அரசு அதனை குளிரூட்டி அப்பேவெல, பொலனறுவை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட பால்பொருள் பதனிடல் தொழிற்சாலைகளுக்கு அனுப்புகிறது.

அங்கு உற்பத்தி செய்யப்பட்டு பால் பொருட்கள் மீண்டும் விற்பனைப் பொருளாக எமது பகுதியிலுள்ள சந்தைகளுக்கு அனுப்பப்படுகின்றன. புள்ளி விபர அடிப்படையில் நோக்கு கின்ற போது வட தமிழீழத்தின் மொத்த பால் உற்பத்தி அதன் சனத்தொகைக்கு போதுமா னதாக இல்லை. தமிழீழத்தின் மொத்தப் பால் உற்பத்தியை நாம் பெறுவோமானால் அது தமிழீழத்தின் தேவைக்கு மேலதிகமாக இருக்கும்.



102589





மாட்டிறைச்சித் தேவையில் நாம் தன்னிறைவு அடைந்துள்ளோம். ஆனால் புள்ளி விபரங்களின் படி ஆட்டிறைச்சித் தேவை நிறைவு செய்யப்பட்டதாக காட்டப்படவில்லை. ஏனெனில் இறைச்சிக்காக வெட்டப்படும் பெருந்தொகையான ஆடுகள் புள்ளி விபரப் பதிவுகளில் இடம் பெறுவதில்லை.

கோழி இறைச்சித் தேவையிலும், முட்டைத் தேவையிலும் பற்றாக்குறை உண்டு. நாம் கோழி வளர்ப்பினை ஊக்குவித்து இந்நிலையினை மாற்றியமைத்து எமது தேவையை நிறைவு செய்ய முடியும்.

மரக்கறி உற்பத்தியில் நாம் தன்னிறைவு நிலையினை எட்டியுள்ளோம். சில சமயங்களில் மேலதிக உற்பத்தியும் இடம் பெற்று மரக்கறிகள் வீதிகளில் வீசப்படுகின்றன.

சிறிலங்காவின் கொழும்பு நகருடன் தான் எமது சகல பாதைகளும் இணைக்கப்பட்டு உள்ளன. பிரித்தானியரிடம் இருந்து, சிங்களவர் கையில் ஆட்சியதிகாரம் மாறிய போது, காணப்பட்ட உட்கட்டுமானமே இன்றும் உள்ளது. இது தொடர்ந்தும் பேணப்படுவதால் நாம் எமது சகல தேவைகளுக்கும் கொழும்பில் தங்கியிருக்கும் நிலைமையே தொடரும்.

தமிழீழத்தின் பிரதான பாதைப் போக்குவரத்து வடமேற்கு, தென்கிழக்கு ஆகிய திசைகளை நோக்கியதாக அமைய வேண்டிய தேவை எமக்குண்டு. இதற்கேற்ற பாதைகள் மற்றும் பாலங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். இவ்வாறு பாதைப் போக்குவரத்து அமையும் போது தமிழீழப் பிரதேசங்களை மேம்பாடு செய்வதற்கும் அப்பிரதேசங்களில் வாழும் மக்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தவும் பிரதேச ஒருமைப்பாட்டினையும் பேணவும் கலாச்சார உறவுகளை மேம்படுத்தவும் வழி பிறக்கும்.

சிங்கள அரசு எமது வளங்களைச் சுரண்டியது. ஆனால் எமது பிரதேசங்களை மேம்பாடு செய்யவில்லை. இதனாலேயே கொக்குத் தொடுவாய், மூதூர், வெருகல் பிரதான பாதைகளில் பாலங்கள் போடப்படவில்லை. அத்துடன் அப்பாலங்கள் போடப்படாததனால் எமது பிரதேசங்களுக்கிடையே தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. அதைவிட சிங்களப் பகுதிகளினூடாகவே வடக்கு, கிழக்குத் தொடர்புகள் பேணப்பட வேண்டிய ஒரு நெருக்குதல் எமக்கிருந்தது.

தமிழீழத்தின் பாதைகளும் பாலங்களும் தமிழீழ மக்கள் அனைவரையும் ஒருங்கிணைப்பதற்கான முறையில் அமைய வேண்டும். பன்முகப்படுத்தல் தத்துவம் வளர்ந்து வரும் இந்நாளில் நாங்கள் விதிவிலக்காக இருக்க முடியாது. தமிழீழத்தின் தலைநகர் திருகோணமலையாக அமையும் போது வட தமிழீழத்தில் மாங்குளமும் தென் தமிழீழத்தில் களுவாஞ்சிக்குடியும் நிர்வாக நகர்களாக வளர்ச்சியடைய வேண்டும்.

இதன் மூலம் வளங்கள் உள்ள இடங்களில் அதற்கேற்ப தொழில்களை ஆரம்பிக்க வசதிகள் ஏற்படும். உதாரணமாக மாங்குளத்தையண்டி நல்ல விவசாய நிலங்கள் உள்ளதால் விவசாயம்சார் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப் படுவதோடு அங்கு விவசாய ஆராய்ச்சி நிலையமும் களுவாஞ்சிக்குடியை அண்டி பாரிய கடல்வளம் இருப்பதால் அங்கு கடற்றொழில் அபிவிருத்தி நிலையத்தையும் அமைத்தல் சிறந்த பயனை அளிக்கும்.

இவ்வகையான இடத்தெரிவுகள் எமது நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்தவும் உதவும். உதாரணமாகக் கூறப்போனால் தமிழீழ மத்திய அரசு திருமலையிலும் அதன் வட பிரதேச செயலகம் மாங்குளத்திலும் ஏனைய மாவட்டங்களின் செயலகங்கள் அந்தந்த மாவட்டங்களிலும் அமைய வேண்டும்.

இச்சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது தமிழீழத்தின் நெடுஞ்சாலைகள் பருத்தித்துறையிலிருந்து கடற்கரை ஓரமாக முல்லைத்தீவு, புல்மோட்டை, திருமலை, மூதூர் ஊடாக மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஆகிய நகரங்களுக்கு ஒரு வீதியும், இன்னொன்று யாழ்ப்பாணம், மாங்குளம், நெடுங்கேணி, புல்மோட்டை ஊடாக திருமலைக்கும் அதனை இணைப்பதாக மன்னார், மாங்குளம் ஊடாக திருமலைக்கும் அமைய வேண்டும்.

இப் பாதைகளை இணைப்பதற்கு பல கிளை வீதிகள் குறுக்காக அமைய வேண்டும். இவ்வாறு பாதைகள் நிர்மாணிக்கப்படும்போது மக்களின் போக்குவரத்துத் தேவைகள் நிறைவு செய்யப்படுவதோடு, எமது உற்பத்திப் பொருட்களை தமிழீழப் பிரதேசமெங்கும் துரிதமாக விநியோகம் செய்யவும் அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் வசதிகள் ஏற்படும்.

தமிழீழப் பிரதேசம் முழுவதற்கும் சாதாரணமாக 60 மெகாவாட் மின்சக்தி தேவையாகும். மேலும் எதிர்வரும் காலத்தில் தமிழீழத்தின் தேவைகளுக்கு 300 மெகாவாட் மின்சாரம் தேவைப்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக எம்மிடம் உள்ள வளங்களை பயன்படுத்தி சக்தித் தேவையில் தன்னிறைவு காண சுமார் 5 வருடங்களுக்கு மேல் செல்லலாம். எனவே குறுகிய காலத்தில் இச் சக்தித் தேவையினைப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

ஆகவே எதிர் காலத்தில் ஆக்கிவாயு, இயந்திரங்களின் மூலம் பெறப்படும் சக்தி, காற்றுச்சக்தி, சூரியசக்தி, கடல் வெப்ப சக்தி மற்றும் உயிரியல் வாயு சக்தி என்பவற்றைப் பயன்படுத்த வேண்டும். நீர்மின் பெறக்கூடிய வசதிகள் எம்மிடம் இல்லை. இதனால் சக்தித் தேவையினை நாம் பெறுவதில் எதிர்கால ஆய்வுகள் முக்கிய இடம் பெற வேண்டியுள்ளன.





காலத்திற்குக் காலம் சிறிலங்கா அரசு தமிழீழ வளங்களை ஆக்கிரமிப்புச் செய்து வந்துள்ளது. அனுராதபுர கால ஆட்சியின் போது தமிழ் மக்கள் மீது சிங்களவர் ஆக்கிரமிப்புச் செய்ய முற்பட்ட சம்பவங்கள் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்பினால் அவை தவிடு பொடியாகின.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழீழ வளங்களை சிங்கள அரசு தனது குடியேற்றங்களுக்கு பயன்படுத்திய வரலாறு உண்டு.

1936ல் சட்டசபைக் காலத்தில் கல்ஓயாக் குடியேற்றம் முன்மொழிவு செய்யப்பட்டு 1947ல் அத்திட்டம் அமுலாக்கப்பட்டதால் தமிழீழ மண்வளம் சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டு இன்று அம்பாறை தனிச்சிங்கள மாவட்டமாக மாற்றப்பட்டு வருகின்றது.

பின்னர் 1952 - 56ம் ஆண்டுகளை அடுத்த காலத்தில் அல்லைக் கந்தளாய், திருமலை முதலிக்குளம், வவுனியாவில் பதவியாக்குளம் ஆகிய இடங்கள் விவசாயக் குடியேற்றங்கள் என்ற போர்வையில் சிங்களவர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இக் குடியேற்றங்கள் விவசாய நிலங்களை அபகரிக்கும் நோக்கிலானவையே. அம்பாறையை நாம் மீளப்பெற வேண்டும். அம்பாறை இழக்கப்படுமானால் எமது மேலதிக நெல்லுற்பத்தியைப் பெற முடியாது போகும். 1947ம் - 52ம் ஆண்டுகளில் ஆட்சியிலிருந்த சிங்கள சிறிலங்கா அரசுகள் கைத்தொழில் அபிவிருத்தி என்ற போர்வையில், சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்தன. உதாரணமாக சீமேந்து தொழிற்சாலை காங்கேசன் துறையி





லும், கடதாசித் தொழிற்சாலை வாழைச்சேனையிலும், எரிசோடாத் தொழிற்சாலை பரந்தனிலும், உப்பளம் ஆனையிறவிலும் அமைக்கப்பட்டதோடு அப்பகுதிகளில் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1981ல் பிறீமா மா அரைக்கும் தொழிற்சாலை நிறுவப்பட்ட திருகோணமலை மாவட்டத்தில் சீனன்குடாப் பகுதியிலும் சிங்களவர்களைக் குடியேற்றத் திட்டமிடப்பட்டது. இதே காலப் பகுதியில் மன்னார், நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் மீன்பிடி அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெற்றன.

சிறிலங்கா அரசு கொஞ்சம் கொஞ்சமாகவே எமது மக்களைச் சுரண்டி இப்பொழுது இப் பகுதிகளை தமது முற்றுமுழுதான ஆட்புலங்கள் எனக் கருதுகிறது.

நாம் தற்சார்புப் பொருண்மியத்தைக் கட்டியெழுப்பும் போது எமது மண்ணும் வளமும் சிங்கள அரசினால் சுரண்டப் படுவதால் நமது பொருளாதார வளர்ச்சிப் பாதையில் பல முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். எமது வளங்கள் அபகரிக்கப்பட்டால் அதனால் நஷ்டமடைவது நாமே. எனவே எமது மண்ணும் வளமும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். □□

3015c.c

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்